| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்,<br>(சென்னை மற்றும் பாண்டிச்சேரி நீங்கலாக) |

**ந.க.எண்.022738 /டி/2021** **நாள் : 29.12.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறனாய்வு தேர்வு (Trust Exam) பிப்ரவரி 2022 – தேர்வு நடத்துதல் – குறித்து.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண். 960, கல்வித் துறை (இ2), நாள்.22.12.2008.
2. அரசாணை (நிலை) எண்.256, பள்ளிக் கல்வித் துறை (இ2), நாள்.22.12.2008
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.24.11.2021.

******

பார்வை 3–ல் காணும் கடிதத்தில் ஊரகத் திறனாய்வு தேர்வு 30.01.2022 அன்று நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

தற்போது, பல பள்ளிகளிலிருந்து தேர்வர்கள் விண்ணப்பிக்க கால அவகாசம் தேவை என்ற தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, தேர்வர்களின் நலன் கருதி கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து வழங்குதல் மற்றும் பதிவேற்றம் செய்தல் குறித்தான் விவரங்களை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பிக்க கால அவகாச நீட்டிப்பினைத் தொடர்ந்து 30.01.2022 அன்று நடைபெறவிருந்த ஊரகத் திறனாய்வு தேர்வு **20.02.2022** அன்று நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. **இவ்விவரங்களை அனைத்து தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும் தலைமையாசிரியர்களின் வாயிலாக ஏற்கெனவே இத்தேர்வினுக்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கும், தற்பொழுது விண்ணப்பிக்கும் தேர்வர்களுக்கும் தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்தல் மற்றும் பதிவேற்றம் செய்தல் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

..2..

| வ. எண் | பணி விவரம் | தேதி |
|---|---|---|
| 1. | ஊரகத் திறனாய்வு தேர்வு நடைபெறும் நாள் | **20.02.2022** |
| 2. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பங்களை ஆன்–லைன் மூலம் பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கிய பின்னர் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன், வருவாய் சான்றினையும் இணைத்து பெறுவதற்கான கடைசி நாள். | **03.01.2022 முதல் 12.01.2022 வரை** |
| 3. | மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் Online மூலம் பதிவேற்றம் Upload செய்வதற்கான கடைசி நாள். | **07.01.2022 முதல் 20.01.2022 வரை** |
| 4. | முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்களில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கைகேற்ப தேர்வு மையங்களை அமைத்து எந்தெந்த பள்ளிகளை எந்த தேர்வு மையத்துடன் இணைக்க வேண்டும் என்பதை உறுதி செய்து தேர்வு மைய விவரங்களுடன் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் | **21.01.2022 முதல் 28.01.2022 வரை** |

எனவே, பார்வை 1–ல் தெரிவிக்கப்பட்டவாறு தகுதி வாய்ந்த தேர்வர்களின் விண்ணப்பங்களை வரவேற்கவும், ஆய்வு செய்து பதிவேற்றம் செய்யவும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

**நகல்**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம்,
   சென்னை–600 006.
   – அவர்களுக்கு பணிந்து அனுப்பலாகிறது.
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை –600 006.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
4. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.